[1st August 1966

ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் வட்டங்கள் அடங்கிய சைதாப்பேட்டை விலங்கின வளர்ச்சி மும்முரத் திட்டப் பகுதியில் (Intensive Cattle Development Project area) முன்னோடி சர்வே நடத்த மாநில அரசாங்கம் எண்ணியுள்ளது. சர்வே முடிந்த பின்னர் இன்ஷூரன்ஸ் முன்னோடி திட்டத்தை அப்பகுதியில் செயல் படுத்துவதே நோக்கமாகும். அந்தச் சர்வேயை நடத்த இந்திய அரசினரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. இம் மாநில கால்நடை வளர்ப்புத் துறை முன்னோடி சர்வேயை ஆரம்பித்துள்ளது.

**திரு. வை. சங்கரன் :** அந்தப் பகுதி மட்டுமல்லாது, ஒவ்வொரு மாவட்டத்திலும் இதை ஏற்படுத்தி ராஜ்யம் பூராவுக்கும் விஸ்தரிப்பதற்கு சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா? அப்படியானால் எந்த முறையில் மாநிலம் பூராவுக்கும் விஸ்தரிக்கப்படும்?

**கனம் திரு. பூ. கக்கன் :** முதலிலே பரீட்சார்த்தமாக இந்த இடத்திலே கொண்டுவரலாம் என்று செய்யப்படுகிறது. அது வெற்றிகரமாக இருந்தால் இதர இடங்களிலும் ஏற்பாடு செய்யலாம்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஆளுங் கட்சியினருடைய சார்பில் இந்தத் திட்டத்தைப்பற்றி பலரால் பேசப்பட்டு வருகிறது. மத்திய அரசைப் பொறுத்தளவிலே ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டதாகவும், மாநில அரசாங்கங்கள்தான் இந்தத் திட்டத்தின் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்றும் சொல்லப்படுகிறது. அப்படியானால், இதில் நம்முடைய அரசாங்கம் தீவிரமாக முயற்சி யெடுக்கவில்லை என்ற கருத்தா? அல்லது தீவிரமாக முயற்சியெடுத்துக்கொண்டு வருகிறது என்ற கருத்தா?

**கனம் திரு. பூ. கக்கன் :** மத்திய சர்க்காரின் ஒப்புதல் பேரில்தான் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள முடியும். ஏற்கனவே இந்தத் திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு கைவிடப்பட்டது. இப்பொழுது மத்திய சர்க்காருடைய ஒப்புதலுடன் சர்வேயை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இனிமேல்தான் எடுத்துக்கொள்ளப்படும்.

### படிப்பு உதவிப்பணம் பெற வருமான வரம்பு

* 10. கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன் :
திரு. து. ப. அழகமுத்து : } கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பிற்பட்ட வகுப்பு காலேஜ் மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வழங்க வருமான வரம்பு என்ன?

(இ) அந்த வரம்புத் தொகையை உயர்த்தும் உத்தேசம் உண்டா?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஆண்டுக்கு ரூ. 1,500

(இ) இல்லை.

1st August 1966]

**திரு. அ. ப. அழகமுத்து :** தலைவரவர்களே, இப்பொழுதுள்ள வருமான வரம்பு போதாது. இதை உயர்த்தினால்தான் இன்றைய சூழ்நிலையில் பொருத்தமாக இருக்குமென்ற காரணத்தால் இதை மீண்டும் பரிசிலனை செய்து இந்த வரம்பை உயர்த்துவதற்கு சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்த வரம்பை உயர்த்தவேண்டுமென்று மாநில டைரக்டர் அவர்கள் அரசாங்கத்திற்கு சிபாரிசு அனுப்பியிருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** வருமானத்தைக் கணக்கிடுகிற பொழுது கிராக்கிப்படியையும் சேர்த்துக் கணக்கிடப்படுகிறது அல்லவா? அப்படியானால் இந்த வருமான வரம்பை உயர்த்துவதற்கு ஏன் தயங்க வேண்டும்? பி.ஏ. படிப்பு மூன்று வருஷங்கள் படிக்கவேண்டுமென்றால், முதல் வகுப்பிலே சேருகின்றபொழுது இருந்த பெற்றோருடைய வருமானம் பொருள்களினுடைய விலையேற்றத்தினால் அவ்வப்பொழுது பாதிக்கப்படுவதால் பிள்ளைகளினுடைய படிப்பு தடைபடுகிறது, ஆகவே இதைத் தவிர்க்க இந்த வருமான வரம்பை உயர்த்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** வருமானத்தைக் கணக்கிடும்பொழுது பெற்றோருடைய சம்பாத்தியம்தான் கணக்கிடப்படுகிறது. அண்ணன் தம்பி சம்பாதித்தால் அது சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை. விவசாயத் துறையில் உள்ளவர்கள் கிஸ்தி கட்டுகிறார்கள், வரி கொடுக்கிறார்கள், அதையும் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. உழவுக் கூலி கொடுக்கிறார்கள், அதையும் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. ஆகவே, அவையெல்லாம் போக அந்த வரம்பிற்கு மேல் வந்தால்தான் கட்டவேண்டுமென்று சொல்கிறோம்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இப்பொழுது செய்யப்பட்ட டீவால்யுவேஷன் காரணமாக 1,200 ரூபாய் என்பதினுடைய மதிப்பு 700 ரூபாய்க்குத்தான் வந்து சேரும். ஆகவே, வருமானக் கணக்கு எடுக்கிறபோது ரூபாயினுடைய உண்மையான வீழ்ச்சியையும் எடுத்துக்கொண்டு, அந்த வருமான வரம்பை ரூ. 4,000 என்று உயர்த்த சர்க்கார் முயற்சி எடுக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** டீவால்யுவேஷனைப் பொறுத்தமட்டில் உள்நாட்டில் ரூபாயின் மதிப்பு பாதிக்கப்படாது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் விலை உயர்வு அதிகம் கிடையாது. ஆகையினால் 4,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கனம் அங்கத்தினர் சொல்வது சரியல்ல. ஏற்கனவே டைரக்டர் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அதன்மேல் அரசாங்கம் பரிசீலனை செய்யும், என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** இந்த வருமான வரம்பின் காரணமாக உத்தியோகத்தில் இருக்கிறவர்கள்தான் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் மாதச் சம்பளம் 125 ரூபாய் வந்தால் கூட, வருஷத்திற்கு 1,500 ரூபாய் வந்துவிடுகிறது. அதை வைத்துக்

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [1st August 1966

கொண்டு அவர்களால் குடும்பத்தையே நடத்த முடியவில்லை. அதனால், அவர்கள் பிள்ளைகளைக் கல்லூரிகளுக்கு அனுப்பமுடிய வில்லை. ஸ்காலர்ஷிப் பெறுவதும் சிரமமாக இருக்கிறது. டைரக்டர் அவர்கள் எந்த அளவுக்கு இதை உயர்த்தலாம் என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள்? குறைந்த பட்சம் இந்த இன்கம் லிமிட்டை 3,000 ரூபாய்க்காவது உயர்த்த அரசாங்கம் முடிவு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** ஸ்காலர்ஷிப் மத்திய அரசாங்கத்தின் மூலமும், மாநில அரசாங்கத்தின் மூலமும் பெறுகிறார்கள். மாநில அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் 1,500 ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள். டைரக்டர் அவர்கள் 2,000 ரூபாயாக வைக்க வேண்டுமென்று குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அதைப் பரிசிலனை செய்கிறோம். மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் லோ இன்கம் க்ரூப்புக்கு 2,000 ரூபாய் வரைக்கும் வைத்திருக்கிறார்கள்.

The income ceiling fixed for the children of low income groups is Rs. 2,000 in respect of all courses except technical courses like medicine veterinary, engineering and agriculture where the limit is Rs. 2,400.

காலேஜ் கோர்ஸைப் பொறுத்தவரைக்கும் லோ இன்கம் க்ரூப்புக்கு 2,000 ரூபாய் வைத்திருக்கிறோம் என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** இந்த வருமான வரம்பை உயர்த்துவது பற்றி ஆலோசனை நடந்து கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த வரம்பை உடனடியாக முடிவு செய்துவிட்டால் மாணவர்கள் இந்தக் கல்வி ஆண்டிலேயே அதற்கேற்றபடி ஃபாரங்களை பூர்த்தி செய்து கொடுப்பதற்கு வழி ஏற்படுமாதலால் அரசாங்கம் அதற்கான முடிவை உடனடியாகச் செய்யுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** இதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** இப்போது ஸ்காலர்ஷிப் கொடுப்பதிலே பிற்பட்ட மாணவர்களிலே 50 சத விகித மார்க்குகளுக்கு மேல் வாங்கியவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. மிகவும் ஏழையாகவுள்ள பிற்பட்ட மாணவர்கள் 30 சத விகிதம், 40 சத விகிதம் வாங்கியிருந்தாலும் எல்லாப் பிற்பட்ட மாணவர்களுக்கும் ஸ்காலர்ஷிப் கொடுக்க வேண்டுமென்ற முறையில் எல்லோருக்கும் உதவி செய்ய அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** மத்திய சர்க்கார் ஸ்காலர்ஷிப்பைப் பொறுத்தவரை வருமான அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த வரை உச்ச வரம்பு 1,500 ரூபாய் என்று இருப்பதை 2,000 ரூபாய் என்று உயர்த்துவது பரிசிலனையில் இருக்கிறது.

திரு. வை. சங்கரன் : இன்றைய நிலையிலே நகரத்திலுள்ள மில் தொழிலாளர்களுடைய மாதச் சம்பளம் 125 ரூபாய்க்கு மேலாகவே இருக்கிறது. ஆகவே, இந்த வரம்பை உடனடியாக உயர்த்துவதற்கு வழிவகை செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எவ்வளவு விரைவாகப் பரிசீலனை செய்யப்பட்டு முடிவு எடுக்க வேண்டுமோ அவ்வளவு விரைவாக முடிவு எடுக்கப்படும்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : ஏற்கனவே, இந்த உதவிப் பணம் கோரி பல மாணவர்கள் விண்ணப்பித்து விட்டார்கள். இப்போது வருமான வரம்பு 1,500 ரூபாய் ஆக இருப்பதை 2,000 ரூபாய் ஆக அரசாங்கம் உயர்த்த இருக்கிறது. அப்படி அதை உயர்த்தும் போது அந்த அளவு வருமானம் வரக்கூடிய பெற்றோர்களின் பிள்ளைகள் புதிதாக விண்ணப்பங்கள் போடுவதற்கு அனுமதி அளிக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே, 1,500 ரூபாய் வரை வருமானம் உள்ளவர்கள் விண்ணப்பங்கள் போட்டிருப்பார்கள். அதை நாம் உயர்த்தப் போகிறோமே தவிர, குறைக்கப் போவதில்லை.

*11 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : } கனம் உள்துறை
திரு. சங்கரன் : }
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குறைந்த வருமானமுள்ளவர்களின் பிள்ளைகள் படிப்பிற்கான ஸ்காலர்ஷிப் பெற வருமான வரம்பென்ன ?

(இ) அந்த வரம்பை உயர்த்தும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) மருத்துவம், பொறியியல், விலங்கின மருத்துவம், வேளாண்மை முதலிய படிப்புத்துறைகள் சம்பந்தமாக வருமானம் வரம்பு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,400. ஏனைய படிப்புத் துறைகள் சம்பந்தமாக வருமான வரம்பு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,000.

(இ) இல்லை.

திரு. கோ. சி. மணி : இந்த வருமான வரம்பு எந்த ஆண்டிலிருந்து நிர்ணயிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : Till 1964, the Government of India scholarships to other backward students were granted on caste-*cum*-income basis. From 1964–65 it is being granted purely on income basis without any reference to caste, as desired by the Government of India.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த உச்ச வரம்பைச் சர்க்கார் ஊழியர்களுடைய குழந்தைகள் விவகாரத்தில் மருத்துவக் கல்லூரி, என்சினியரிங் கல்லூரி போன்றவற்றில் சேருபவர்களுக்கு இன்னும் கொஞ்சம் தளர்த்தி உச்ச வரம்பை அதிகமாகச் செய்யும் உத்தேசம் உண்டா ?